රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils & Local Government
ස්වදේශ කටයුතු අංශය
உள்நாட்டலுவல்கள் பிரிவு
Home Affairs Division
"නිල මැදුර", ඇල්විටිගල මාවත, කොළඹ 05.
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05
"Nila Madura", Elvitigala Mawatha, Colombo 05.
TP : +94 112 050 450
Fax : +94 112 369 971
Email: info@moha.gov.lk
Web : www.moha.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: HA/3/3/10-2 | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 08.12.2022

அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும்,

அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்,

**ஓய்வூதியர்களுக்கான உயிர்வாழ் சான்றிதழ் - 2023**

**கிராம உத்தியோத்தர்களுக்கான அறிவுரை வழங்குதல்**

இலங்கை ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தை தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்காக வருடாந்தம் அவர்களுடைய உயிர்வாழ் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இதனடிப்படையில் 2023 ஆண்டுக்கான உயிர்வாழ் சான்றிதழை பெற்றுக்கொள்கையில் நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும், சமூக நிலைமைகளை கருத்திற்கொண்டு செலவினை குறைக்கும் நோக்குடன் ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் தனித்தனி படிவங்கள் வழங்கப்படுவதற்கு பதிலாக ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் ஒரு தனிப்படிவம் என்றவாறான முறைமையினை மாற்றியமைக்க ஓய்வூதிய திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02. இதன் போது கடைபிடிக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களுக்கான அறிவுரை தொகுப்பு இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பப்படுவதோடு, இது தொடர்பாக அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்குமாறு தயவாய் அறியத்தருகின்றேன்.

எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதி – ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகம், ஓய்வூதிய திணைக்களம் - தங்கள் இலக்கம் PEN/POL/06/27/2022 மற்றும் 28.11.2022 ஆம் திகதி கடிதத்திற்கு அமைய த.அ

## ஓய்வூதியர்களின் உயிர்வாழ் சான்றிதழ் – 2023
## கிராம அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்

ஓய்வூதியர்களான இலங்கை பிரஜைகளின் ஓய்வூதியத்தினை தொடர்ச்சியாக வழங்குவதற்காக வருடாந்தம் அவர்களின் உயிர்வாழ் சான்றிதழ் பெறுதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழ் சான்றிதழ் பெறப்படப்படவேண்டிய தேவைப்பாட்டிற்கு இணங்க நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நிலமைகளைக் கருத்தில்கொண்டு செலவினைக் குறைக்கும் நோக்குடன் ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் தனித் தனி படிவங்கள் வழங்கப்படுவதற்கு பதிலாக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் ஒரு தனிப்படிவத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இம் முறைமையினை மாற்றியமைக்க ஓய்வூதியத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப் பணியினை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்காக பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

01. இத் திட்டத்தின் கீழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 01 படிவம் அறிமுகப்படுத்தப்படுவதுடன் 01 – 04 வரையான நிரல்கள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் வெவ்வேறாக பூரணப்படுத்தப்பட்டு பிரதேச செயலகத்தினால் தங்களுக்கு வழங்கப்படும். அதன் பிரகாரம் தங்கள் பிரிவில் வசிக்கும் ஓய்வூதியர்களின் பெயர், ஓய்வூதிய இலக்கம் இ தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் (இருப்பின்) ஆகியவை உள்ளீடு செய்யப்பட்ட இணைப்பு 01 உள்ள படிவம் பிரதேச செயலகத்தினால் 2022.12.15 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

02. அவ் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியர்கள் தங்கள் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு அவர்களுடைய ஆள் அடையாகத்தை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் இணைப்பு 01 படிவத்தில் அவ் ஓய்வூதியருக்கு உரிய வரிசையில் ஒப்பம் அல்லது கை பெருவிரல் அடையாளமிடுவதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக உயிர்வாழ் சான்றிதழை பூரணப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

03. இணைப்பு 01 இல் உள்ள படிவத்தில் வேறு விடயங்கள் நிரலின் கீழ்

- I. கையொப்பத்திற்கு பதிலாக கைபெருவிரல்அடையாளம் இடப்பட்டிருப்பின் அதற்கான காரணம்
- II. விதவை / தபுதாரர் மறுமணம் செய்திருப்பின் அது தொடர்பாக
- III. அநாதைப்பிள்ளை தொழில் ஒன்றில் ஈடுபடின் அது தொடர்பாக
- IV. ஓய்வூதியர் தமது வசிப்பிடத்தில் இருந்து வெளியேறி இருப்பின் தற்போது வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு
- V. ஓய்வூதியருக்காக பாதுகாலவர் நியமிக்கப்பட்டிருப்பின் பாதுகாலவரின் பெயர் மற்றும் அடையாளட்டை இலக்கம்
- VI. ஓய்வூதியர் வெளிநாடு சென்றிருப்பின் அது தொடர்பாக
- VII. தங்களால் அவதானிக்கப்பட்ட ஏதேனும் விசேடமான காரணங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

04. உயிர்வாழ் சான்றிதழ் பெறப்படும்போது மதகுருமார்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் HAF-2/15CORDI/1507-(SUB 1) ஆம் இலக்க 2019.11.06 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கிரமா அலுவலர், புத்த துறவி / பெண் புத்த துறவி வசிக்கும் விகாரை/மடம்/வனாந்தரத்திற்கு சென்று உயிர்வாழ்ச் சான்றிதழைப்பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

05. ஊனமுற்று அல்லது முதுமைகாரணமாக நடமாட முடியாமல் வீட்டில் தங்கியுள்ள / முதியோர் இல்லத்தில் வசிக்கும் ஓய்வூதியர்கள் மற்றும் அநாதைப் பிள்ளைகளின் உயிர்வாழ் சான்றிதழ் அவர்கள் வசிப்பிடங்களுக்கு சென்று பரிசீலனை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஓய்வூதியருக்காக பாதுகாவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பினும் இணைப்பு 01 இல் உள்ள படிவத்தில் ஓய்வூதியரின் கையொப்பம் / கையொப்பமிட முடியாவிடின் மாத்திரம் விரலடையாளம் இடப்பட வேண்டும்.

06. கையொப்பம் பெறப்பட்ட படிவமானது 2023.02.15 ஆந் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரால் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட வேண்டும். இத் தகவல்களை அடிப்படையாக கொண்டு தரவுத்தளத்தினை புதுப்பித்த பின்னர் கையொப்பம் இடாத ஓய்வூதியர்களின் பட்டியலினை 2023.02.20 ஆந் திகதிக்கு முன்னர் மீண்டும் உரிய கிராம அலுவலரிடம் கொடுக்க வேண்டும். கிராம அலுவலரால் அப்பட்டியல் பூரணப்படுத்தப்பட்டு 2023.03.31 ஆந் திகதி பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் இப் பணியினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

07. மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிராம அலுவலரின் முன்பாக கையொம்பமிடத் தவறிய ஓய்வூதியரின் விபரங்கள் அடங்கிய நிரையானது மீண்டும் கையொப்பமிட முடியாதவாறு வெட்டப்பட்டு படிவத்தின் அனைத்துப்பக்கங்களிலும் பெயர் மற்றும் அதிகாரபூர்வ முத்திரை இடப்பட்டு விபரங்கள் அனைத்தும் சரியானதென உறுதிப்படுத்துதல் கிராம அலுவரின் பொறுப்பாகும்.

08. ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட ஓய்வூதியர்களின் விபரங்கள் அடங்கிய தரவுத்தளத்தினை புதுப்பிக்கும்போது தளத்தினுள் நெரிசல் ஏற்படாதவண்ணம் இப் பணியினை மேற்கொள்வதற்காக மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கமைவாக செயற்படுவதன் மூலம் விடய அலுவலருக்கு ஆதரவனை வழங்கவேண்டும்.

09. உயிர்வாழ் சான்றிதழை 2023.03.31 ஆந் திகதிக்கு முன்னர் புதுப்பிக்க தவறும் ஓய்வூதியரின் ஓய்வூதியமானது நிறுத்தப்படுமென ஓய்வூதியருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

நாட்டின் தற்போதைய நிலைமையினை கருத்தில் கொண்டு, செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கத்திற்கான இத் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கான தங்கள் ஆதரவினை மெச்சுகின்றேன்.

Annex 01

Sri Lanka Pensions

**Form Issued with Pension Instruction Letter No. 07/2022**
**Pensioners' Life Certificate – 2023**

| District | | Divisional Secretariat | | Grama Niladhari Division/No | |
|---|---|---|---|---|---|

| 01. Name of the Pensioner | 02. Pension Number (Type/Number) | 03. NIC Number | 04. Contact Number | 05. Signature | 06. Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| 7. | | | | | |
| 8. | | | | | |
| 9. | | | | | |
| 10. | | | | | |
| 11. | | | | | |
| 12. | | | | | |
| 13. | | | | | |
| 14. | | | | | |
| 15. | | | | | |

I certify that the signatures of the above pensioners are affixed in my presence.

..................
Date

.....................................
Signature of Grama Niladahri and Official Stamp